## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 05.06.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### முதுகலை (M.Sc / M.Tech) மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (Ph.D) 2023-24 மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வு இன்று நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முதுநிலை பட்டமேற்படிப்பு பயிலகம் வாயிலாக 11 கல்வி வளாகங்களில் 33 துறைகளில் முதுகலைப் படிப்பையும் 28 துறைகளில் முனைவர் பட்டப் படிப்பையும் வழங்குகிறது. துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் "இக்கல்வி ஆண்டில் (2023-24) முதுகலை மற்றும் முனைவர் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 19.04.2023 அன்று தொடங்கியது. இவ்வாண்டு மாணவர் சேர்க்கைக்கு இணையதளம் மூலமாக முதுகலை படிப்பிற்கு 2235 மாணவர்களும் முனைவர் பட்டப்படிப்பிற்கு 448 மாணவர்களும் விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்தவர்களில் தகுதியுடைய மாணவர்களுக்கு நுழைவுத்தேர்வு 04.06.2023 9.00 மணி முதல் 12.30 மணி வரை நடத்தப்பட்டது." என்று தெரிவித்தார்.

நுழைவுத் தேர்வு, முதுநிலை பட்டமேற்படிப்பு பயிலக முதல்வர் முனைவர் ந.செந்தில், தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் வ.பாலசுப்பிரமணி, வேளாண் தோட்டக்கலை முதன்மையர் முனைவர் பெ.ஐரின் வேதமோனி, மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர் நா.மரகதம், அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. நுழைவுத் தேர்வுக்கு ஆந்திரா, கர்நாடகம், மேற்கு வங்காளம், மகராஷ்டிரா, தெலுங்கானா, கேராளா, ஹிமாசல் பிரதேசம், பீகார், ஒடிசா, ராஜஸ்தான், மேகலாயா, சத்தீஸ்கர், குஜராத், ஜார்கண்ட், புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து மாணவர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். நடப்பு ஆண்டு இறுதி பருவம் முடிந்தவுடன் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் 2023-24 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட உள்ளனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**